பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 25 | செவ்வாய்க்கிழமை 12.12.2023 | அதிர்வு 133

## கொழும்பில் தமிழரை இலக்கு வைத்து அநீதி

**பொலிஸாரின் பதிவு நடவடிக்கைக்கு எதிராக சபையில் சஜித் போர்க்கொடி**



கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மக்களை இலக்கு வைத்துப் பொலிஸார் மேற்கொள்ளும் 04




# மூவின மக்களுடனான பேச்சு மூலம் தீர்வு கிடைத்தால் மாபெரும் வெற்றி

## இமயமலைப் பிரகடனத்தை நேற்று நேரில் சமர்ப்பித்த உலகத் தமிழர் பேரவையிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

(சீ.ஏ.தமிழ்மாறன்)

"இலங்கையில் மூவின மக்களுடனான பேச்சு மூலம் தீர்வு கிடைத்தால் - அரசமைப்பில் மாற்றம் ஏற்பட்டால் அது மாபெரும் வெற்றியாகும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். 04

## அதிகாரப் பகிர்வு, பொறுப்புக்கூறல்: ஏற்றுள்ளனர் பௌத்த பீடாதிபதிகள்

**இது பாரிய திருப்புமுனை என்கிறார் சுமந்திரன்**




"ஒற்றையாட்சியற்ற அதிகாரப் பகிர்வு மற்றும் பொறுப்புக்கூறலை நான்கு பௌத்த பீடாதிபதிகளும் ஏற்றுள்ளமை பாரிய திருப்பு முனையாகும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06

## ஆரம்பத்தில் சந்தேகம்; இனிமேல் ஒத்துழைப்பு

**ஹக்கீம் தெரிவிப்பு**




"அரசியல் தீர்வுக்கான உலகத் தமிழர் பேரவையின் முயற்சியை ஆரம்பத்தில் நானும் சந்தேகத்துடனே பார்த்தேன். இருந்தாலும் அவர்களைச் சந்தித்துக் கதைத்த பிற்பாடும், அவர்களுக்கு இன்று பல இடங்களில் இருந்தும் கிடைக்கின்ற அவர்களின் வேலைத்திட்டத்துக்கான ஆதரவும், 06

## யாழ். பல்கலை மாணவர் பிரதிநிதியை நான்கரை மணிநேரம் துருவிய ரி.ஐ.டி.



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரும் ஊடகவியலாளருமான இராசரத்தினம் தர்ஷனிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தர்ஷனிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து சுமார் 4 மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசாரணை நேற்று முற்பகல் 04




தமிழர் தாயகத்தில் – குறிப்பாக வடக்கில் – சாதாரண குடும்பங்களை நெருக்கடியில் ஆழ்த்தும் முக்கியமான விடயம் பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதாகும். அதற்காக முதலாமாண்டு அனுமதிக்குப் படுகின்ற அல்லோல கல்லோலம், புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பிள்ளையைத் தயார்படுத்தல் என்று நடக்கும் திருவிழா எல்லாம் சொல்லி மாளாதவை.

இவற்றில் தோற்றால் பின்னர் 06


सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
இந்தியா-இலங்கை-சிங்கப்பூர்
நடன கலைஞர்கள்
வழங்கும்
அமரா
இந்திய இதிகாச
சிற்பங்களின் சிறப்பினை சித்தரிக்கும் நாட்டிய நாடகம்
நெறியாழ்க்கை
அரவிந்த் குமாரசாமி
நடன வடிவமைப்பு
ஆடைவடிவமைப்பு
மோகனப்பிரியன்
தவராஜா
இசையமைப்பு
ராஜ்குமார் பாரதி
12 டிசம்பர் 2023 (செவ்வாய்கிழமை)
மாலை 6.00 மணி
யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
அனுமதி இலவசம்
தயாரிப்பு
அப்சராஸ் ஆர்ட்ஸ் நிறுவனம், சிங்கப்பூர்
அனுசரணை:
SHARI FUND
apsaras arts
FLAMINGO


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# தமிழர் மக்களை இலக்காகக் கொண்ட தகவல் திரட்டலை உடன் நிறுத்துங்கள்

## நாடாளுமன்றில் மனோ எம்.பி. வேண்டுகோள்

**“கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மக்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு தனிப்பட்ட தகவல்கள் திரட்டப்படுகின்றன. வாழ்த்துத் தெரிவிப்பதற்காவா மதம், பிறந்த திகதி உள்ளிட்ட விடயங்கள் கோரப்படுகின்றன. தமிழர்களை இலக்காகக் கொண்ட தகவல் திரட்டலை உடன் நிறுத்துங்கள்.”**

**– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் வலியுறுத்தினார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

“கிருலப்பனை, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, நாரஹேன்பிட்டிய, தெஹிவளை, பம்பலப்பிட்டி, மட்டக்குளி, முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் வாழும் தமிழர்களை இலக்காகக் கொண்டு தகவல் திரட்டும் நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தகவல் கோருவதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்று குறிப்பிடப்படுகின்றது.

ஆனால், விண்ணப்பங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் விநியோகிக்கப்படுகின்றன. பொலிஸ் கட்டளைச் சட்டம் பற்றி பேசும் இலங்கைப் பொலிஸ"க்கு நாட்டின் அரசமைப்பு சட்டம் தெரியவில்லை.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் நாட்டின் அரச கரும மொழிகளாக அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், சிங்கள மொழியில் மாத்திரமே சகல விண்ணப்பங்களும் வழங்கப்படுகின்றன.

இது டிரான் அலஸின் பொலிஸ் இராஜ்ஜியமா? ரணில் விக்கிரமசிங்கவின் பொலிஸ் இராஜ்ஜி யமா ? அல்லது தேசபந்துவின் பொலிஸ் இராஜ்ஜியமா? இந்த நாட்டில் யுத்தம் இல்லை, பயங்கரவாதம் இல்லை. அவ்வாறான நிலையில் ஏன் வீடு வீடாகச் செல்கின்றீர்கள்? தகவல் திரட்டுகின்றீர்கள்.?

தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்குவதைப் போன்று பொலிஸார் வீடு வீடாகச் சென்று விண்ணப்பப் படிவங்களை வழங்குகின்றார்கள். பொலிஸார் பொலிஸ"க்குரிய வேலையைப் பார்க்க வேண்டும். அதை விடுத்து கிராம சேகவரின் வேலையைப் பொலிஸ் செய்ய கூடாது.

விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் மதம் உள்ளிட்ட தகவல்கள் கேட்கப்பட்டுள்ளன.

மதம் தொடர்பான விபரங்களை ஏன் கேட்கின்றீர்கள்? தீபாவளி, நத்தார் மற்றும் தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளுக்கு வாழ்த்து அனுப்புவதற்காகவா? அதேபோல் பிறந்த திகதி கேட்கப்படுகின்றது. பிறந்த தினத்துக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காகவா? அத்துடன் தனிப்பட்ட விடயங்கள் கோரப்படுகின்றன.

பாதாளக் குழுக்கள் மற்றும் சமூக விரோதச் செயற்பாட்டாளர்களுடன் பொலிஸ"க்குத் தொடர்பு உண்டு. நான் ஒட்டுமொத்தப் பொலிஸாரையும் குறிப்பிடவில்லை.


ஒருசிலர் சிறந்த முறையில் சேவையாற்றுகிறார்கள். தனிப்பட்ட தகவல்களைப் பொலிஸார் கோரும் போது பொதுமக்கள் அச்சமடைகின்றார்கள்.

தொலைபேசி இலக்கத்தை வைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியும். தமிழ் மக்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு தகவல் கோரப்படுகின்றன. ஆகவே, இதனை உடன் நிறுத்துங்கள்.”

– என்றார்.

# கொழும்பு நகரில் தமிழர்களை மட்டும் இலக்குவைக்கவில்லை

## மனோவின் கருத்துக்கு டிரான் பதில்



“கொழும்பில் தமிழ் வீடுகளை மாத்திரம் இலக்கு வைத்து பொலிஸ் பதிவு இடம்பெறவில்லை. அனைத்து வீடுகளிலும்தான் பதிவு இடம்பெறுகின்றது.”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் நேற்று கருத்து வெளியிட்ட அமைச்சர்,

”தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களிடமும்தான் தகவல் திரட்டப்படுகின்றது. தற்போது 90 வீத பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

வெளிப் பகுதிகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் கொழும்பில் தலைமறைவாகியுள்ளனரா அல்லது கொழும்பில் உள்ளவர்கள் வெளியில் உள்ளனரா என்பது உள்ளிட்ட தகவல்களைப் பெறவே இந்தப் பாதுகாப்பு பதிவு இடம்பெறுகின்றது. வீட்டில் எத்தனை பேர் உள்ளனர் எனக் கேட்டால், தகவல்களை வழங்குவது தவறு கிடையாது.” – என்றார்.

## மூவின மக்களுடனான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன்போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம், இரா.சாணக்கியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தைக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பியிடம் உலகத் தமிழர் பேரவையினர் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் இணைந்து சமர்ப்பித்தனர்.

சந்திப்பின் நிறைவில் சம்பந்தனுடனான பேச்சு தொடர்பில் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாம் இந்த வேலைத்திட்டத்தை முன்னரே செய்திருக்க வேண்டும் என்று சம்பந்தன் தெரிவித்தார். எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் செய்திருக்க வேண்டும், நாங்கள் பல வருடங்கள் பின்தங்கியிருக்கின்றோம், இதை இப்போதாவது நீங்கள் செய்திருக்க முன்வந்திருப்பது மிகவும் முக்கிய விடயம், இதனை நாம் வரவேற்கின்றோம் என்றும் சம்பந்தன் கூறினார்.

மக்களுடனான பேச்சு மூலம் தீர்வு கொண்டு வருவது மிகவும் நல்ல விடயம், இதன் மூலமாக அரசமைப்பு மாற்றத்தை உருவாக்க முடியுமென்றால் அதுவொரு பெரிய வெற்றி என்றும் சம்பந்தன் தெரிவித்தார்." – என்றார்.

"எமது முயற்சியை எதிர்ப்பவர்கள் எம்மைச் சந்தித்த பின் தெளிவு கிடைக்காவிட்டால் விமர்சிக்கலாம்" என்றும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் ஊடகங்களிடம் மேலும் கூறினார்.

## கொழும்பில் தமிழரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநீதியான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி மற்றும் மோதர ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உள்ள தமிழ் மக்களை குறிவைத்து மீண்டுமொரு பதிவு நடவடிக்கை நடந்து வருகின்றது. இந்த அனைத்து பதிவு விபர பத்திர ஆவணங்களும் சிங்கள மொழியிலேயே வழங்கப்படுகின்றன. நாட்டின் அரசமைப்பை மீறி சிங்கள மொழியில் மட்டுமே இந்த விபர பதிவுப் பத்திர ஆவணங்களைப் பொலிஸார் வழங்குகின்றனர். அது தவறான விடயம் என்றும், "ரணில் – பொலிஸ் இராஜ்ஜியம்" நடக்கின்றது எனச் சந்தேகம் எழுகின்றது என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நேற்று சபையில் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நடவடிக்கை தவறானது. ஆட்களைப் பதிவு செய்ய நடைமுறையொன்று உள்ளது. இந்தப் பதிவு முறைக்கு குறித்த நடைமுறையையே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்காகப் பொலிஸ் முறையைப் பயன்படுத்தி அநீதி இழைக்கக் கூடாது.

நாட்டின் தேசிய பாதுகாப்பைப் போலவே குற்றங்களைக் குறைப்பதும் முக்கியம் என்றாலும், ஏதேனும் நியாயமற்ற முறை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. எந்தவொரு வேலைத்திட்டத்திலும் வெளிப்படைத்தன்மையும் ஜனநாயகமும் நிலைநாட்டப்பட வேண்டும்." – என்றார்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2.30 மணி வரை தொடர்ச்சியாக இடம்பெற்றது.

கடந்த 2022ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்தபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் பாடல் இசைக்கப்பட்டமை மற்றும் மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள், மாணவர் ஒன்றியம் நடத்திய ஊடக சந்திப்புகள் தொடர்பிலேயே தர்ஷனிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.






# வட் வரி திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

வட் வரி திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது.

வட் வரி திருத்தச் சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்புக்கு ஆதரவாக 100 வாக்குகளும், எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய, வட் வரி திருத்தம் திருத்தங்களுடன் 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வட் வரி திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, குழுநிலை சந்தர்ப்பத்தில் அரசு பல்வேறு திருத்தங்களை முன்வைத்தது.


அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப் பின்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 100 வாக்குகளும், எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வட் வரி திருத்தச் சட்டமூலம் தொடர்பில் விவாதிப்பதற்காக நேற்றுமுன் தினம் நாடாளுமன்றம் விசேடமாகக் கூட்டப்பட்டிருந்தது.

எனினும், கோரமின்மையால் இது தொடர்பான விவாதம் இடைநடுவே நிறுத்தப்பட்டதுடன், நாடாளுமன்ற சபை நடவடிக்கைகள் நேற்றுக் காலை 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டன.

இதற்கமைவாகவே நேற்று வட் வரி திருத்தம் தொடர்பிலான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதுவரை 15 வீதமாக உள்ள வட் வரியை 18 வீதமாக அதிகரிப்பதற்கு இந்தச் சட்டமூலத்தில் யோசனை முன் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| G 004. Mahinda Rajapaksa | Not Voted | G 050. Shasheendra Rajapaksa | Not Voted | O 015. G.L. Peiris | Not Voted |
| G 005. Prasanna Ranatunga | Yes | G 051. Seetha Arambepola | Yes | O 030. Niroshan | Not Voted |
| G 006. Susil Premajayantha | Yes | G 053. K. Kadder Masthan | Not Voted | O 048. Buddhika Pathirana | Not Voted |
| G 009. Douglas Devananda | Yes | G 057. Suren Raghavan | Not Voted | O 049. M. S. Thowfee | Not Voted |
| G 011. Keheliya Rambukwella | Not Voted | G 060. Chamara Sampath Dasanayake | Not Voted | O 061. Velu Kumar | Not Voted |
| G 012. Mahinda Amaraweera | Yes | G 065. Vajira Abeywardena | Yes | O 062. Kavinda Heshan Jayawardhana | Not Voted |
| G 013. Wijeyadasa Rajapakshe | Yes | G 067. C. B. Rathnayake | Yes | O 070. Chaminda Wijesiri | No |
| G 014. Harin Fernando | Yes | G 068. S. M. Chandrasena | Not Voted | O 071. Waruna Liyanage | Not Voted |
| G 015. Ramesh Pathirana | Not Voted | G 069. Mahindananda Aluthgamage | Yes | O 072. Hesha Withanage | No |
| G 018. Kanchana Wijesekera | Yes | G 076. Kapila Athukorala | Not Voted | O 086. Nalaka Godahewa | Not Voted |
| G 019. Manusha Nanayakkara | Yes | G 078. S. M. M. Muszhaaraff | Yes | O 089. Nimal Lanza | Yes |
| G 024. Ranjith Siyambalapitiya | Not Voted | G 079. Jayantha Ketagoda | Yes | O 108. Thilak Rajapakshe | Not Voted |
| G 027. Mohan Priyadarshana De Silva | Yes | G 080. Sampath Athukorala | Yes | | |
| G 028. Janaka Wakkumbura | Yes | G 083. Pradeep Undugoda | Yes | | |
| G 030. Kanaka Herath | Yes | G 086. Jagath Kumara Sumithraarachchi | Not Voted | | |
| G 031. Thenuka Vidanagamage | Yes | G 088. Nalaka Bandara Kottegoda | Not Voted | | |
| G 032. Pramitha Bandara Tennakoon | Yes | G 089. Udayakantha Gunathilaka | Yes | | |
| G 033. Lasantha Alagiyawanna | Not Voted | G 090. Kokila Gunawardene | Not Voted | | |
| G 034. Rohana Dissanayaka | Yes | G 091. Milan Jayathilake | Yes | | |
| G 035. Premalal Jayasekara | Yes | G 093. Sudarshana Denipitiya | Yes | | |
| G 036. Arundika Fernando | Yes | G 094. Isuru Dodangoda | Not Voted | | |
| G 042. Siripala Gamalath | Not Voted | G 108. D. Weerasingha | Not Voted | | |
| G 043. Anuradha Jayaratne | Yes | G 111. Yadamini Gunawardena | Not Voted | | |
| G 044. S. Viyalanderan | Yes | G 116. Lalith Varna Kumara | Yes | | |

# பொலிஸ் பொதுமக்கள் நிவாரண தினத்தை மீள ஆரம்பிக்கத் தென்னக்கோன் தீர்மானம்

கொரோனா பெருந்தொற்று காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் பொதுமக்கள் நிவாரண தினத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் பதில் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தீர்மானித்துள்ளார்.

அதற்கிணங்க, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் காலை 9 மணி முதல் பொதுமக்கள் நிவாரண தினம் இடம் பெறும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசாரணைப் பிரிவுகளில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், தீர்வு வழங்கப்படாத அல்லது தேவையற்ற தாமதங்கள் தொடர்பான நியாயமான விடயங்கள் குறித்து பொலிஸ்மா அதிபரிடம் முறையிட முடியும்.

சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை இணைத்து நடத்தப்படும் இந்த மக்கள் நிவாரண தினத்தின் மூலம் பொதுமக்களுக்கு இலங்கைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தாமதமின்றி நியாயமாக சென்றடைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு என வும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



பதில் பொலிஸ்மா அதிபர் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பொதுமக்கள் நிவாரண தினத்தில் வருகை தருவதற்கு எதிர்பார்ப்புடன் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு நேரடி பதில்கள் வழங்கப்படும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

# மாயமான பாடசாலை மாணவி கங்கையிலிருந்து சடலமாக மீட்பு

இரத்தினபுரி – கொலன்ன பிரதேசத்தில் காணாமல்போன பாடசாலை மாணவி ஒருவர் கிங் கங்கையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொலன்ன பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவியாவார்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி காணாமல்போன நிலையில் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதையடுத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மாணவி கிங் கங்கையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொலன்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடக்கும் அக்கப்போர் பல குடும்பங்களில் பிரளயம்தான்.

ஆனால் தென்னிலங்கையில் இவ்விடயத்தை ஒட்டி வேறு ஓர் ஊழலும் நடக்கின்றமை புள்ளிவிவரங்களுடன் வெளியாகியுள்ளது. அதில் வடக்கின் வகிபாகம் எவ்வளவு தூரம் உள்ளது என்பது இனித்தான் கண்டறியப்பட வேண்டும்.

தெற்கில் 2020 ஜனவரி முதல் மே 2022 வரையான இரண்டரை ஆண்டு காலத்தில், கல்வி அமைச்சின் செயலாளரால் நேரடியாக வெளியிடப்பட்ட கட்டளைக் கடிதங்களின் அடிப்படையில் 2,237 மாணவர்களை இடைநிலைத் தரங்களுக்குச் சேர்க்குமாறு 37 பிரபல அரசுப் பள்ளிகளின் அதிபர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையின் மூலம் இவ்விடயம் அம்பலமாகியுள்ளது.

பெரும்பாலான கடிதங்கள் ஒரு கட்டளை வடிவத்தில் இருந்தன என அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. "சம்பந்தப்பட்ட பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்து விட்டு, அதை எனக்கு உறுதிப்படுத்தவும்" என்று அக்கட்டளைகள் அமைந்துள்ளன.

கொழும்பு ஆனந்தா கல்லூரி, கொழும்பு விசாகா வித்தியாலயம், கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்பு சிறிமாவோ பாலிகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு நாலந்தா கல்லூரி என்பன இத்தகைய அதிக உத்தரவுகளைப் பெற்ற பாடசாலைகளாகும்.

இந்த காலகட்டத்தில் செயலாளரால் இவ்வாறு வழங்கப்பட்ட மொத்தக் கடிதங்களின் எண்ணிக்கை 4,775 க்கும் அதிகமாக இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை–72சதவீதம்–அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் நாடாளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள், பிரதிநிதித்துவங்கள் மற்றும் உத்தரவுகளுக்கு அமையும் வகையில் எழுதப்பட்டவை.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்தமையினால் அதையொட்டி அமைச்சரவை சில, பல வழிகாட்டுதல்களை வழங்கியது. அவற்றின் அடிப்படையில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அதற்கான சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் அளவுகோல்களையும் வழங்கினர். ஆனால் இப்போது அவர்களே தங்கள் சொந்த வழிகாட்டுதல்களை மீறிவருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

தேசிய பாடசாலைகளில் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான நிபந்தனைகளை கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார். ஆயினும், 2021 இல் ஜனவரி மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் செயலாளரால் வழங்கப்பட்ட 69 சதவீத கடிதங்கள் நிபந்தனையின்றி மாணவர்களை தங்கள் பள்ளிகளில் சேர்க்க அதிபர்களுக்கு அனுமதி – அழுத்தம் – வழங்கியுள்ளன. கடந்த ஆண்டு ஜனவரி மற்றும் மே மாதங்களுக்கு இடையில், 1,630 கடிதங்களில் 97 சதவீதம் இதே போக்கைக் காட்டின.

முறையான சேர்க்கை விண்ணப்ப செயல்முறை கூட இல்லாமல், மற்றப் பெற்றோருக்கு வழங்கப்படாத சலுகைகள் கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் விதத்தில் உத்தரவுகள் பல்வேறு அதிபர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளரால் நேரடியாக வழங்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இடைநிலைத் தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக அமைச்சின் செயலாளர் ஆண்டு முழுவதும் கடிதங்களை வழங்கியதன் காரணமாக அதிபர்கள் 'தங்கள் கடமைகளில் அதிருப்தி அடைந்துள்ளனர்' என்பது ஆய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டது.

பெற்றோர்களும் இவ்வாறான கடிதங்களுடன் பாடசாலைக்குத் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தனர். இத்தகைய கட்டளைகளை ஏற்று பிள்ளைகளைக் குறுக்கு வழியில் அனுமதிப்பதால், அவை பற்றி அரசியல்வாதிகள் மற்றும் பல்வேறு வெளித் தரப்பினர் தொலைபேசியில் தொடர்ந்து விசாரித்து, கேள்வி எழுப்பி, நியாயம் கேட்டு, அதிபர்களைத் தொல்லை பண்ணுகின்றனர். இவ்விடயத்தில் அதிபர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு செயலாளர் செவிசாய்க்கவில்லை என்று அதிபர்கள் தரப்பில் குறை கூறப்படுகின்றது.

காலியிடங்கள் இல்லாத நிலையில் இவ்வாறான கட்டளைகளுக்கு அமைய மாணவர்களைச் சேர்ப்பதில் அதிபர்கள் சிரமப்படுகின்றார்கள் என்றும் சுட்டப்பட்டது.

தகுதியான பல மாணவர்கள், அவர்களின் பெற்றோர்களால் செல்வாக்கு மிக்க குழுக்களின் ஆதரவைப் பெறமுடியாதமையால், 'பிரபலமானவை' என்று அங்கீகரிக்கப்பட்ட தேசிய பாடசாலைகளில் அனுமதி பெறும் விடயத்தில் சமமான வாய்ப்பை இழந்துள்ளனர் என்று ஆய்வறிக்கை சுட்டுவதும் கவனிக்கத்தக்கது.

இந்த ஆய்வறிக்கை தொடர்பில் இன்னொரு வேடிக்கையும் உண்டு.

வெளித் தரப்பினரின் தலையீட்டையும், கல்வியின் தரம் மேலும் மோசமடைவதையும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

ஆனால், இந்த ஆய்வைச் செய்ய நியமிக்கப்பட்ட குழுவில் கூட, கல்வி அமைச்சரின் தனிப்பட்ட ஊழியர் ஒருவரை ஆய்வு முடிவுகளை மேற்பார்வையிட கல்விச் செயலாளர் நியமித்தார் என்று கூறப்படுகின்றது. இதனால் ஆய்வுக் குழுவில் இருந்த பொது அதிகாரிகள் அவர்களின் தொழில்முறை அறிவு, அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதில் நெருக்கடி ஏற்பட்டது என்று சுட்டப்பட்டது.

கல்வித் துறையை ஒரு கைபார்க்காமல் இவர்கள் விடமாட்டார்கள் போலும்.

## ஆரம்பத்தில் சந்தேகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆசீர்வாதமும் எங்களையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியை உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் நேற்று நேரில் சந்தித்து இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தைக் கையளித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் ரவூப் ஹக்கீம் எம்.பியும் கலந்துகொண்டார். சந்திப்பின் நிறைவில் ஊடகங்களிடம் அவர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வைத் தேடி இந்தக் காலகட்டத்தில் உலகத் தமிழர் பேரவையினர் முன்னெடுக்கும் இப்படியான புதிய முயற்சியை நாங்கள் வரவேற்கின்றோம். இது வெற்றியடைவதற்கான உதவி, ஒத்தாசைகளை எங்களால் இயன்ற சந்தர்ப்பங்களில் வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றோம்." – என்றார்.

## அதிகாரப் பகிர்வு,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியை உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் நேற்று நேரில் சந்தித்து இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தைக் கையளித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் சுமந்திரன் எம்.பியும் கலந்துகொண்டார். சந்திப்பின் நிறைவில் ஊடகங்களிடம் அவர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியமானது. ஒற்றையாட்சியை விடுத்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்காகத்தான் நாங்கள் பயணிக்கின்றோம். அதை இந்த ஆவணம் (இமயமலைப் பிரகடனம்) ஏற்றுக்கொள்வதாகத் தெரிகின்றது. அத்துடன் பொறுப்புக்கூறல், பல அத்துமீறல்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டும் என்பதும் இந்த ஆவணத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள து.ஆகவே, அவர்கள் எடுத்த இந்த முயற்சி தொடர்ந்து செல்வது நல்லது. மக்கள் மத்தியில் உரையாடலை நடத்தவுள்ளதாக அவர்கள் சொல்கின்றார்கள். எங்கள் ஆதரவை அவர்களுக்கு வழங்குகின்றோம்." – என்றார்.




# நாடளாவிய ரீதியில் இன்றும் தொடர்கிறது தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு

நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட அடையாள பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்றது.

தபால் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

27 ஆயிரம் தபால் ஊழியர்கள் இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதும் இந்த வேலைநிறுத்தத்தின் மற்றுமொரு நோக்கமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு இன்று நள்ளிரவு வரை தொடரவுள்ளது.

# வட் வரி நடைமுறையானதும் டீசலின் விலை அதிகரிக்கும்

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு



இலங்கையில் 18 வீத வட் வரி நடைமுறைக்கு வந்ததும் டீசல் லீற்றரின் விலை 63 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஒரு லீற்றர் டீசல் தற்போது 346 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இது எதிர்வரும் ஜனவரி முதல் 63 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கூட இந்த வட் வரிக்கு உட்படுத்தப்படும்.

நாட்டில் கடற்றொழில் துறை ஏற்கனவே சீர்குலைந்துள்ளது. இந்தநிலையில் 18 வீத வட் வரியை அமுல்படுத்துவதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அவலத்துக்கு உள்ளாகும்." - என்றார்.

# இலங்கை வர்த்தகர்களிடம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர் கோரி டுபாய் நிறுவனம் தாக்கல் செய்த மனு நிராகரிப்பு

இலங்கை வர்த்தகர்கள் இருவர், தமக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர் வழங்க வேண்டும் என்று கோரி டுபாய் நிறுவனம் ஒன்று தாக்கல் செய்த மனு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

டுபாயின் யூரோ கட்டடத்தில் அமைந்துள்ள வணிக நிறுவனம், இலங்கையின் ஜிக்கர் காசிம் மற்றும் அவரது மகன் மொஹமட் ஷகீல் காசிம் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

தமது இரண்டு தரப்புக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட வர்த்தக நிதி ஒப்பந்தத்தின் கீழ் பிரதிவாதிகளிடமிருந்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை மீட்டுத்தர வேண்டும் என்று மனுதாரரான டுபாய் நிறுவனம் கோரியிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது பிரதிவாதிகளின் கோரிக்கையின் பேரில் பொருட்கள் வழங்கப்பட்டன என்று மனுதாரரின் சாட்சி தெரிவித்த போதிலும், அதனை நிரூபிப்பதற்கான ஆவண ஆதாரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்று கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

அத்துடன் மனுதாரரின் மனுவையும் நீதிபதி நிராகரித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சுறாக்கள் வெளியே; நெத்தலிகளே உள்ளே!

வழமையாக அரச உயர் மட்டங்களில் - அமைச்சர்கள் மட்டத்தில் - நடக்கும் ஊழல்கள், மோசடிகள் போன்றவற்றில் பெருந்தலைகள் சிக்குவதில்லை. அவை தந்திரமாகத் தப்பி விடுகின்றன. ஊழல், மோசடிகளில் கிட்டும் வருமானங்களின் பெரும் பங்கு அவர்களுக்கு. ஆனால் 'றிஸ்க்' என்னவோ அத்தலைகளின் எடுபிடி போலப் பணியாற்றும் அரச உயரதிகாரிகளுக்குத்தான்.

உயரதிகாரிகளிலும் முதனிலை அதிகாரிகள் தங் களைப் பிரச்சினையில் மாட்டிக்கொள்ள இடமளிக்காத மாதிரித் தம்மைக் காப்பரண் செய்து கொண்டுதான் ஊழலை முன்நகர்த்துவார்கள்.

பாவம் அடுத்த மட்ட அதிகாரிகள்.

யாரோ முன்னெடுத்து, யாரோ சுளையாக லாபம் சுருட்டும் ஊழல், மோசடிகளில் அவர்கள் சிக்கிக் கொள்கின்றார்கள்.

இலங்கை சுகாதாரத் துறையிலும் தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட கைதுகள் கீழ்மட்ட நபர்களை மட்டுமே குறி வைப்பனவாக உள்ளன என சுகாதார நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

ஊழலுக்குப் பின்னால் பெருங் கைகள் - அதி புத்தி சாலித் தரப்புகள் - உள்ளன என அத்தொழிற்சங் கங்கள் நம்புகின்றன.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், இது போன்ற உயர்மட்ட விவகாரங்களில் முன்னாள் அமைச்சர், சுகாதார செயலாளர் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் (என்.எம்.ஆர்.ஏ.) அதிகாரிகள் போன்ற முக்கிய பிரமுகர் களின்பங்கைநிராகரிக்கமுடியாதுஎன்றுவலியுறுத்தி யுள்ளனர்.

எனவே, தற்போதைய கைதுகள் உயர்மட்ட நபர்களின் தலையீட்டைக் கவனிக்கத் தவறியுள்ளமையால், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை விரைவு படுத்தி - விரிவுபடுத்தி - இந்த ஊழலுக்குக் காரணமான உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு சுகாதார சங்கங்கள் வலியுறுத் துகின்றன.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் தலைவர் டாக்டர் ருக்ஷான் பெல்லானா, தற் போதுநடைபெற்றுவரும்விசாரணைகள்குறித்து தீவிர கவலைகளை வெளிப்படுத்தினார். முக் கிய குற்றவாளிகளைக் கைது செய்யாதமை விசாரணை அதிகாரிகளின் செயல்திறன் குறித்து கேள்விகளை எழுப்புகிறது என்று அவர் கூறி யுள்ளார்.

மேலும், மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் நிபுணத்துவ மன்றத்தின் தலைவர் டாஜ்க்டர் சமல் சஞ்சீவ, ஏற்கனவே இந்தத் தரமற்ற இம்யூனோகுளோ புலின் ஊசிகளைப் பெற்று,அதனால் பாதிக் கப்பட்டிருக்கும் நோயாளிகளின் தலைவிதி தொடர்பில் ஒரு தெளிவான நிலைமை இல்லாத மையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இதேவேளை, மோசடி தொடர்பில் புதிய சுகாதார அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார் எனவும், விசாரணைகளைத் துரிதப்படுத்து மாறு சட்ட அமுலாக்க அதிகாரிகளிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் மூத்த சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தி ருக்கின்றார்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்துக் கொள்வனவு ஊழல் தொடர்பான விசாரணை களை ஒட்டி, சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் உட்பட பல அதிகாரிகள் தற்போது விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

ஆயினும், பெரும் முதலைகள் - சுறாக்கள் - வெளியே சுதந்திரமாகத் திரிகின்றன. நெத்த லிகள்தான் சிக்கியுள்ளன போலும்.

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து பெருமளவு கைதிகள் நேற்று தப்பியோட்டம்!

## தேடுதல் பணிகள் இரவிரவாகத் தீவிரம்



வெலிக்கந்தை, கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து 50 கைதிகள் நேற்று தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடியவர்களைக் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தப்பியோடியவர்களில் 21 பேர் மீண்டும் பொலிஸில் சரணடைந்த நிலையில் சுங்காவில பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

### இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு

# தமிழகத்துடன் பேச்சு நடத்துவதே சிறந்தது

## அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றார்



**“இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தமிழகத்துடன் பேச்சு நடத்துவதே சிறந்தது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேச முடியும்.”**

**- இவ்வாறு அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கடற்றொழில் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை நெடுங்காலமாகத் தொடர்கின்றது. எம்மைப் பொறுத்தவரை நாம் அதற்காக இரண்டு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். முதலாவது நடவடிக்கை இராஜதந்திர ரீதியில் அதனை முன்னெடுப்பது. அந்தவகையில் இராஜதந்திர ரீதியாகப் பல பேச்சுகள் நடத்தப்பட்டு அவை பயனளிக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இரண்டாவதாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்தல். அந்தவகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக இரண்டு தினங்களுக்கு முன்பதாகவும் அத்துமீறி எமது கடற்பரப்பு பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

எமது மீனவர்கள் அதன்போது கடற்படையினரிடம் அது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்கள். கடற்படையினரும் வேண்டா வெறுப்பாக இந்திய மீனவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இத்தகைய கைது செய்திகள் தமிழ்நாட்டில் பரப்பப்படும் போது அது பிரச்சினைக்குரியதாகின்றது. தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் கடற்றொழில் எனவும், இலங்கைக் கடற்படையினரே அவர்களை முறையற்ற விதத்தில் கைது செய்கின்றார்கள் என்றும் அங்குள்ளவர்கள் குற்றச்சாட்டுகின்றார்கள்.

அதற்கிணங்க ஒரு புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் நான் சிந்தித்துள்ளேன். அந்தவகையில் வடக்கிலுள்ள கடற்றொழிலாளர்கள் ஒரு குழுவாக தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி அங்குள்ள ஊடகங்களுக்கும் இங்குள்ள உண்மை நிலையைத் தெளிவுபடுத்த முடியும்.

இந்திய மீனவர்கள் அத்துமீறியே இலங்கைக் கடற்பரப்பில் பிரவேசித்து வளங்களை அழிக்கின்றார்கள் என்றும், அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்து அதன் காரணமாகவே இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்வதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

அதுமட்டுமன்றி வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேச முடியும். அத்துடன் அங்குள்ள ஊடகங்களுக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியும்.

இந்த செயற்பாட்டிற்கு வடக்கிலுள்ள எம்.பிக்கள் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். எனினும், சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. அதற்கு இணக்கம் தெரிவிக்காமல் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரை அழைத்துப் பேசலாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

அது ஒரு பிரச்சினை இல்லை. எனினும் அடிக்கடி இந்தியத் தூதுவர்கள் மாற்றமடைந்து செல்வதால் அதில் ஒரு சிக்கல் காணப்படுகின்றது.

எனினும், இந்தியத் தூதுவர்களுக்கு இந்த விவகாரம் அத்துப்படி. அவர்கள் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் முழுமையாக அறிந்துள்ளார்கள் என்பதால் அவர்களும் கூட தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல்வாதிகளுடன் பேசலாம். அதன் மூலம் தான் நிரந்தர தீர்வு காண முடியும் என்ற யோசனையையே முன்வைப்பார்கள்.

அதற்கிணங்க சார்ள்ஸ் எம்.பி. இதனைப் புரிந்துகொண்டு தமிழ்நாட்டுக்குச் சென்று இந்தப் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தினால் நிரந்தர தீர்வு கிடைக்கும் என நான் நம்புகின்றேன்.” – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி., “இலங்கையில் உள்ள இந்திய தூதுவர்கள் மாறினாலும் தமிழ்நாடு போன்ற மாநில அரசுடன் நாம் பேச்சு நடத்தாமல் இந்தியா என்ற பாரிய அரசுடன் அது தொடர்பில் பேசினால் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே எமது எதிர்பார்ப்பு.” – என்றார்.

# இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்கக் கோரி எஸ். ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கடந்த 9 திகதி தமிழகத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் இதுபோல தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற் கொள்ள வலியுறுத்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில், “விசைப்படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மீன்பிடித் துறை முகத்தைச் சேர்ந்த 12 மீனவர்களும், மற்றுமொரு விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 13 மீனவர்களும், கடந்த 9 திகதி இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மற்றொரு மீன்பிடிப் படகு இலங்கை கடற்படையின் ரோந்துக் கப்பலால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவது, நமது மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க உரிய நடவடிக்கைகளை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மேற்கொள்ள உத்தரவிடு மாறு கேட்டுக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# நடிகர் விஜயகாந்த் பூரண குணமடைந்து வீடு திரும்பினார்: மருத்துவமனை அறிக்கை

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சிகிச்சை பெற்றுவந்த மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சென்னை மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த விஜயகாந்த் பூரண குணமடைந்து நேற்று வீடு திரும்பினார்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவால் சில ஆண்டுகளாக வீட்டிலேயே ஓய்வில் இருந்து வருகிறார். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், அவ்வப்போது மருத்துவமனைக்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

வீட்டில் ஓய்வில் இருந்த விஜயகாந்துக்கு இருமல், காய்ச்சல், சளி தொந்தரவுகள் ஏற்பட்டதால் கடந்த மாதம் 18 ஆம் திகதி சென்னை கிண்டியை அடுத்த மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.



இந்த நிலையில், 21 நாட்களுக்குப் பின்னர் குணமடைந்து விஜயகாந்த் நேற்று வீடு திரும்பியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.12.2023

## மேஷம்

இன்று நீங்கள் எளிதான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த்தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்ச்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

## ரிஷபம்

இன்று உங்களிடம் தைரியமான உறுதியான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## மிதுனம்

இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.

## கடகம்

இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்பிற்கு தகுந்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்புகளை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

## சிம்மம்

இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும்.. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைக் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்கலாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று நீங்கள் சிறந்த மன ஆற்றலுடனும் காட்டுப்பட்டுடனும் காணப்படும் சிறந்த நாள். இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அமைதி பெறுவீர்கள்.

இன்று பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கும் சூழல் காணப்படும். பணிகளை விரும்பி எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே பரபஸ்பர மதிப்பு உயரும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.

## துலாம்

இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம்.பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.

## விருச்சிகம்

அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதட்டமின்றி சமநிலையில் இருக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.12.2023




இன்று பதட்டமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமை தியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதட்டம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையா ளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வ தும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக் கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

அதிக பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம். இறை வழிபாடும் பிரார்த்தனையும் மேற்கொள்வது சிறந்தது.




இன்று ஸ்திரமான. இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தரு ணங்களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன் கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக் கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத்தொகை வகை-கயில் பணம் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ்வீர் கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில் பிரதி-பலிக்கும். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்




இன்றைய நாள் உங்கள் எதிர்பார்ப் பின் படி இருக்காது. எதிர்மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களையும் பாது காப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பராம ரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் காரணமாக சேமிப்பது கடினமாக இருக்கும்.

கோபத்தின் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES — KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கம் அங்குரார்ப்பணம்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு சிறந்த நாளைய தினத்திற்கான இளமையான மற்றும் ஆரோக்கிய மான மனதை உருவாக்குவதற்காக மாவட்ட சதுரங்க சங்க அங்குரார்ப் பணம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி எஸ். தனஞ்செயன் தெரிவு செய்யப்பட்டதுன் 15 பேர் அடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கம் பின்வரும் குறிக்கோள்களை இலக்காக் கொண்டு பல்வேறு செயற் பாடுகளை 2024 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்த அங்குரார்ப்பண நிகழ் வில் தீர்மானிக்கப்பட்டது.

அதில் சதுரங்கத்தின் கொள்கை களையும் அது வாழ்க்கைக்கும் தீர் மானமெடுப்பதற்கும் எவ்வாறு பங்களிக் கும் என்பதைக் கற்பித்தல், முல்லைத்தீவு மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டில் ஆர்வத்தை ஊக்குவித்தல், சதுரங்கக் கழகங்கள் மற்றும் சங்கங்களுடன் கல்விக்கூடங்களின் உருவாக்கத்தை ஊக்குவித்தல், முல்லைத்தீவு மாவட் டத்தில் மாவட்டம் தேசிய மற்றும் சர்வ தேச போட்டிகளை ஒழுங்கமைத்தல் அல்லது ஒருங்கிணைத்தல், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் சதுரங்கப் போட்டிகளில் மாவட்ட வீரர் கள் பங்கேற்பதை எளிதாக்குதல் ஆகி யனவற்றுடன் மதிப்பிடப்பட்ட விளை யாட்டுகளில் செயற்றிறன் அடிப்படை யில் சதுரங்க வீரர்களைத் தரப்படுத்துவ தோடு மேற்கூறியவற்றை அடைவ தற்குத் தேவையான அனைத்து நிர் வாகச் செயற்பாடுகளையும், நிதி திரட் டல் மற்றும் பிற செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல் என்பனவாகும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.குணபாலன், மாவட்ட விளை யாட்டு உத்தியோகத்தர் முகுந்தன், முல்லைத்தீவு மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டில் ஆர்வத்துடன் செயற்படும் அரச உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.












**உரலார் கேள்வி :- என்ன? உங்களது நண்பர்களான சுமந்திரனும், ஸ்ரீதரனும் தமிழரசுக் கட்சியின் தலைமைக்காகப் போட்டியிடுகிறார்களாமே? உங்களது ஆதரவு யாருக்கு?**

**உலக்கையார் பதில் :-** கட்சியின் உறுப்புரிமை இல்லாத எனது ஆதரவு, இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? அதனால் அவர்களுக்கு ஆகப் போவது ஒன்றுமில்லை! ஆனாலும் இனத்தின் மீது



பற்றுக்கொண்ட ஒரு பொது மகனாய் அவர்களின் போட்டி பற்றிய எனது கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

'இரண்டுபேரையும் நான் ஆதரிக்கிறேன்' என்று பொய்மை செய்ய நான் தயாராக இல்லை. ஆதரவு யாருக்கு என்பதைச் சொல்வதற்கு முன்பாகக் கீழ்க் கண்ட விடயங்களைத் தெளிவு செய்து கொள்ள விரும்புகிறேன்

- ❖ இப் பதவியைத் தாம் விரும்புவது எதற்காக என்பதனைப் போட்டியாளர்கள், மக்களுக்கு முதலில் சொல்ல வேண்டும்.
- ❖ அடுத்து, அவர்கள் இப்பதவியை வைத்துத் தாம் என்ன செய்ய நினைக்கிறார்கள் என்பதனையும் மக்கள் மன்றிற்கு வெளிப்படுத்த வேண்டும்.
- ❖ அதற்கடுத்து இப்பதவிச் செயற்பாட்டிற்கான தமது தகுதிப்பாட்டை அவர்கள் உண்மை உணர்ந்து உரைக்க வேண்டும்.

இவற்றைச் சொன்ன பிறகுதான் இவர்களில் யாரை ஆதரிப்பது என்பதை முடிவு செய்யலாம்.

நடந்து முடிந்த ஆயுதப் போராட்டத்தின் போது, தமிழர்களைக் கண்டு அஞ்சிய பேரினத்தார், அன்று நமது கோரிக்கைகளை ஓரளவாவது நிறைவேற்றும் மனநிலையில் இருந்தனர். போராளிகள் அழிக்கப்பட்ட இன்றைய நிலையில் அவர்களுக்கிருந்த அச்சம் முற்றாய் நீங்கி விட்டது.

அதனால் மீண்டும் தமிழர்களின் உரிமைகளை விழுங்கும் முயற்சியை அவர்கள் தொடங்கி விட்டார்கள். நாட்டின் பொருளாதார நிலை தமிழர்களை விழுங்கும் அவர்களது முயற்சியை ஓரளவு கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. இந் நிலை நீங்கினால் அவர்கள் தமிழர்களுக்கு எதிராகத் 'தாண்டவம்' ஆடப் போவது சர்வ நிச்சயம்.

இதுதான் களச் சூழ்நிலை. இந்நிலையில் இப்பதவியை ஏற்கப் போகிறவர், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தீர்க்கதரிசனத்தோடு என்ன செய்யப் போகிறார் என்பதுதான் முக்கிய முதல் கேள்வி.

தமிழர்கள் மேல் செலுத்தப்பட்ட அக்கிரமமான அழிவுகளைக் கண்டு கவலையுற்று, போர் முடிவுற்ற போது உலக நாடுகள் நமக்குச் சார்பாய்ப் பேசத் தொடங்கின. அச்சார்பினை இது வரையும் நம் தலைவர்கள் நமக்கு வாய்ப்பாகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

நம் தமிழ்த் தலைவர்கள், போர் முடிந்ததன் பின்னான இந்தப் பதினான்கு ஆண்டு காலத்தையும் உட்பூசலுக்கும், பதவிப் போட்டிக்குமாகக் கழித்தனரேயன்றி, உருப்படியாய் இதுவரை ஒன்றும் செய்ததாய்த் தெரியவில்லை.

கட்சித் தலைமையையும், இனத் தலைமையையும் ஏற்க விரும்பிப் போட்டியிடுவோர் இனியேனும் இந்நிலையை மாற்றி இன உயர்விற்கு உருப்படியாய் ஏதேனும் செய்ய முயல வேண்டும்.

நம்மை மறக்கத் தொடங்கி விட்ட உலக நாடுகளை ஏதேனும் வகையில் 'உசுப்பேற்றி', மீண்டும் நம்மீது அக்கறை காட்டச் செய்ய வேண்டியது, தலைமையை ஏற்கப் போகிறவரின் முதல் வேலையாதல் வேண்டும்.



பின்னர் அவர்கள் மூலம், இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கச் செய்வித்து, அந்தச் சூழலை நமக்குச் சார்பாகப் பயன்படுத்தி, சரியான

(15ஆம் பக்கம் பார்க்க)

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்காய் இலங்கை அரசுடன் பேசத் தொடங்க வேண்டும். புதிய தலைவர் செய்ய வேண்டிய அவசியமான அடுத்த காரியம் இது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படப்போகும் தலைவர் இவ்விரண்டு காரியங்களையும் செய்ய வேண்டு மானால், வெளிநாட்டுத் தூதரங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை நம் பக்கமாக ஈர்த்தெடுத் தல் அவசியமாகிறது. அதற்கு, புதிதாக வரப் போகும் தலைவருக்கு ஆங்கில அறிவு அவசி யத்தேவை என்பதைச் சொல்லாமலேயே நாம் புரிந்து கொள்ளலாம்.

அதே போல அத்தலைவர் நமக்குச் சார் பான தீர்வுத்திட்டம் ஒன்றினைக் கொணர வேண்டு மாயின் அரசுடன் அவர் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். அதற்கு ஆங்கில அறிவுடன், சட்டத்துறை பற்றிய அறிவும் அவசியமாய்த் தேவைப்படும்.

இவ்விரண்டு தகுதிகளும் இல்லாமல் கட்சித் தலைமையை ஏற்றால் அத்தலைவரால் எத னையும் சாதிக்க முடியாதென்பது நிச்சயம்.

'பிறகென்ன? வாரிதியார் சுற்றி வளைத்து ஒரு மாதிரி மூக்கைத் தொட்டு விட்டார். இதைவிட சுமந் திரனுக்குத்தான் தனது ஆதரவு என்பதை அவர் வெளிப்படையாகச் சொல்லிவிடலாமே' என நீங்கள் நினைப்பது புரிகிறது. உங்கள் நினைப் புத் தவறு!

ஓர் இனத்தைப் பிரதிபலிக்கப் போகிற பெரிய கட்சி ஒன்றைத் தனி ஒரு மனிதர் நிர்வகிக்க முடியாது என்பதை நாம் முதலில் உணர வேண்டும். தனி மரம் தோப்பாகாது என்று நம் பெரியவர்கள் ஒன்றும் சும்மா சொல்லிவிடவில்லை. அதற்குப் பின் ஆயி ரம் அர்த்தங்கள் இருக்கின்றன.

ஆங்கிலமும், சட்டமும் சுமந்திரனுக்கான 'ப்ளஸ் பொயிண்டுகள்'. அதே நேரத்தில் அவர் மேல் ஏற்றப்பட்டிருக்கும் 'போராட்டத்திற்கு எதி ரானவர்' என்பதான ஒரு பழிச் சொல் அவருக்கான 'மைனஸ் பொயிண்ட்'.

ஆங்கிலம், சட்டம் என்பவை ஸ்ரீதரனுக்கான 'மைனஸ் பொயிண்டுகள்'. அதே நேரத்தில் தனது நாடாளுமன்ற உரைகளினூடு அவர் ஏற்படுத்தி வைத்திருக்கும் போராட்ட ஆதரவு நிலைப்பாடும், கிளிநொச்சி மாவட்டத்தில் அவர் பெற்று வைத் திருக்கும் மக்கள் ஆதரவும் அவருக்கான 'ப்ளஸ் பொயிண்டுகள்'.

இவற்றை வைத்துத்தான் நாம் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே முதுமையின் காரணமாக இயங்க முடியாமல் நின்ற ஒருவ ரையும், மேற் சொன்ன ஆங்கில, சட்ட அறிவுகள் இல்லாமல் இயங்க முடியாமல் நின்ற ஒருவ ரையும் பொம்மைத் தலைவர்களாய் வைத்துக் கொண்டு ஏறவும் முடியாமல், இறங்கவும் முடியாமல் செயற்பட்ட கட்சியின் நிலை கண்டு தமிழ் மக்கள் சலித்துப் போய் இருக்கின்றனர். மீண்டும் அப்படி ஒரு நிலை வந்தால், அது கட்சிக்குச் சமாதி கட்டும் முயற்சியாய்த் தான் இருக்கும் என்பதில் சந் தேகம் இல்லை.

ஆங்கில மொழியிலும் சட்டத்திலும் ஆட்சி இல்லாத நிலையில் ஸ்ரீதரன் தலைமைப் பொறுப்பினை ஏற்றால், முதுமையால் சுமந் திரனை நம்பி இருந்த சம்பந்தனைப் போலவே இவரும் சுமந்திரனின் வழிப்படுத்தலில் இயங்க வேண்டி வரும். அது உகந்ததல்ல. அப்படி நடந்தால் ஸ்ரீதரன் மீண்டும் ஒரு பொம்மைத் தலைவராய் ஆவதைத் தவிர வேறு வழியில்லாமற் போகும்.

அதனால் இன்றைய நிலையில் சுமந்திரனைக் கட்சியின் தலைவராக்குவதுதான் பொருத்தமான செயல் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் மக்கள் ஆதரவு பெற்ற ஸ்ரீதரனும், சாணக்கியனும் வடக்கு, கிழக்கின் பிரதிநிதிகளாகி, இணைச் செய லாளர் பொறுப்பினை ஏற்றால் சோர்ந்து கிடக்கும் கட்சிக்கு அது 'சேலைன்' ஏற்றும் முயற்சியாக நிச்சயம் அமையும் என்று கருதுகிறேன்.

தமது வளர்ச்சியை விட இனத்தின் வளர்ச்சி முக்கியம் என்கின்ற உணர்வு இருக்குமானால் சுமந்திரனும், ஸ்ரீதரனும் தமக்குள் கைகோர்த்து ஒருவர் குறையை மற்றவர் நிறையால் நிரப்பி கட்சியைப் பலப்படுத்த முயல்வதுதான் புத்தி சாலித் தனம்.

தமிழ் மக்களின் தலைவிதி நன்றாக அமைய வாய்ப்பிருந்தால், நான் சொன்னவை நடக்க வாய்ப்பிருக்கிறது. விதியே விதியே (ஈழ) தமிழ்ச் சாதியை என் செயக் கருதி இருக்கிறாயடா?

**சல்லடையார் சலிப்பு - 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! நம்மில் ஒற்றுமை நீங் கின் அனைவர்க்கும் தாழ்வு!'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகின்ற நம்மவர்கள் பண்ணு கிற கூத்துக்களைத் தாங்க முடியவில்லை. இவர்களை எப்படித்தான் நாம் கையாளுவது?**

**உலக்கையார் பதில் :-** 'அற்பனுக்கு மவுசு வந் தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்' என்பது நமது மூதாதையர் சொல்லி வைத்த பழமொழி. அங்கிருந்து வரும் நம்மவர்களில் பலர் அப்பழ மொழியை நிரூபிக்க முயல்கின்றனர். வறுமை யில் கிடந்த நம்மவர்களுக்கு வெளிநாடுகள்



சொர்க்க வாழ்க்கையைப் பரிசளித்து விட்டன. அதன் வீரியத்தை ஜீரணிக்க முடியாது அவர்கள் தடுமாறுகின்றனர். அதனால்தான் அவர்கள் அப்படி நடந்து கொள்கின்றார்கள் என்று நினைக் கிறேன்.

மகாபாரதத்தில் ஒரு கதை வரும். நகுசன் என் கின்ற ஓர் அரசன் நூறு 'அசுவமேத' யாகங்களைச் செய்துமுடித்து தேவலோகத்து இந்திரப் பதவியைப் பெறுகிறான். அங்கு சென்ற அவன் விண்ணுலக வாழ்வு தந்த திமிரில், தனது மண்ணுலக வாழ்வை மறந்து 'இந்திரலோகம் எனக்குச் சொந்தமென்றால் இந்திராணியும் எனக்குச் சொந்தம் அல்லவா? அவளைக் கொண்டு வா!' என்று உத்தரவிட்டு, அதனால் முனிவர்களின் சாபத்துக்கு ஆளாகிப் பூமியில் விழுகிறான்.

நம்மவர்களின் நிலையும் கிட்டத்தட்ட இது வாகத்தான் இருக்கிறது.

எதிர்பாராத செல்வத்தின் வரவும், அச் செல்வப் பெருமையை வெளிக்காட்ட முடியாத அங்குள்ள சமூக நிலைமையும் இவர்களைத் தகிக்கச் செய்ய, இங்கு வந்து அத்தகிப்பை நீக்க முயல்கிறார்கள் அவர்கள். அதனால்தான் அவர்கள் அப்படி நடந்து கொள்கின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை மட்டும் குற்றம் சொல்லிப் பயனில்லை. நம்மிலும் பிழை இருக்கிறது. உரிமையாய்ப் 'போ!' என்று ஒருமையில் பேசி அனுப்பி வைத்தவர்களை, 'வாருங்கோ!' என்று தேவையில்லாமல் மரியாதை கொடுத்து வரவேற்கத் தொடங்கியது எங்களின் முதற்பிழை! இங்கிருந்து செல்கையில் இருந்த பழக்கங்களையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு, தங்களது வெளிநாட்டுப் பெருமிதத்தைக்காட்ட, ஏதோ தேவலோகப் பிரதிநிதிகளாய் அவர்கள் நடக்கமுயன்ற போது வாய் பிளந்து நின்றது நமது அடுத்த பிழை! அவர்கள் காட்டிய 'எடுப்புகளுக்கெல்லாம்' ஆட்பட்டு நாம் நம்மைத் தாழ்ந்தவர்களாய் நினைக்கத் தொடங்கியது மூன்றாவது பிழை! இப்படி எங்கள் பிழைகளின் 'லிஸ்டும்' நீண்டு கொண்டேதான் போகிறது.

அனுப்பி வைத்த பொழுது இருந்த உறவு நிலையை, இங்கு வரும்போதும் நாம் அப்படியே பேணினால், அவர்களது 'அளப்பறைகள்' கொஞ்சம் குறைய வாய்ப்பிருக்கிறது. இனியேனும் முயல்வோம்.

**சல்லடையார் சலிப்பு - 'அப்படிப்பேண வெளிக்கிட்டால், டொலர்ஸும், பவுண்ஸும் பிறகு வராது பாருங்கோ.. ஹீ .. ஹீ....ஹீ...ஹீ...!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- மாவீரர் தினத்தன்று வெளிநாடுகளில் நம்மவர்கள் காட்டிய உணர்ச்சிகரமான எழுச்சியைப் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** எனது வாயைக் கிளறி எல்லோரிடமும் திட்டு வாங்கித் தருவதற்கென்றே கேள்விகளைக் கேட்கிறீர்கள். ஆனாலும் நீங்கள் கேட்ட பிறகு எனது கருத்தைச் சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. பாதுகாப்பும், வசதியும் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு, அவர்கள் நடாத்தும் அந்த மாவீரர்தின எழுச்சியில் மதிப்பு வர மறுக்கிறது.

மாவீரர்கள் தங்களுக்கு மரியாதை கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தம்மைத் தியாகம் செய்யவில்லை. தம் தாய் மண்ணிற்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் தம்மைத் தியாகம் செய்தார்கள். அவர்களுக்குச் செய்கிற மரியாதை, அவர்களின் நோக்கத்திற்கானதாக இருக்க வேண்டும். அதை விடுத்து, அவர்களை மரியாதை செய்வதாய்ச் சொன்னால், அதனை அம் மாவீரர்களே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என நினைக்கிறேன்.

புலம்பெயர்ந்து செல்வோரால், நாளுக்கு நாள் நம் தாய் மண்ணின் இருப்பு பலவீனப்பட்டுக் கொண்டே இருக்கிறது. மாவீரர்களை மரியாதை செய்வதானால், போர் முடிந்து விட்ட இந்தச்



சூழ்நிலையில் அங்கு சென்றவர்கள் இங்கு வர முயலவேண்டும். அது முடியாவிட்டாலும், இங்கிருக்கும் உறவுகளை அங்கு அழைக்கும் வேலையையாவது விட்டு விட வேண்டும். இவற்றைச் செய்ய அவர்கள் தயாரா? என்று கேளுங்கள். 'ஆம்' என்று பதில் வந்தால் தான் அவர்களின் உணர்ச்சிகரமான எழுச்சியை மதிக்க முடியும்.

**சல்லடையார் சலிப்பு - இது நல்ல கதையாக் கிடக்கு... இங்கத்த ஹொட் கிளைமேற்றை அவையள் எப்படித் தாங்குவினமாம்? வாரியாருக்கு இது விளங்கேல பாருங்கோ.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# அச்சுவேலியில் தனிமையில் சென்ற பெண்ணிடம் வழிப்பறி

## ஒரு பவுண் காப்பு, அரைப் பவுண் மோதிரம் 'அபேஸ்'

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதியில் தனிமையில் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்கிவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

அச்சுவேலி, நாவற்காடு வீதியில் பாடசாலையொன்றுக்கு அருகில் நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

ஒரு பவுண் காப்பும், அரைப் பவுண் மோதிரமும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.



தனிமையில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பெண் அணிந்திருந்த நகைகளைப் பறிக்க முயன்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதன்போது மழைக் கவச அங்கி மூலம் உடலை முற்றாக மூடி ஓட்டோ ஒன்றில் வந்த மர்மநபர் ஒருவர் பெண்ணைத் தாக்கிய நிலையில் இருவரும் பெண் அணிந்திருந்த நகைகளைப் பறித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழ்நாள் சாதனையாளர் ‘வடமராட்சி தில்லைநாதன்’

அ.சா. அரியகுமார்
(ஓய்வுநிலை அதிபர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி – புலோலியைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து இன்று கொழும்பில் ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ வழங்கிக் கௌரவிக்கின்றன. தில்லைநாதனுக்கான இந்தக் கௌரவிப்பு பாராட்டுக்குரியது.

‘வடமராட்சி தில்லைநாதன்’ என அழைக்கப்படும் மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன் 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தனது ஊடகப் பணியைச் சிறப்புற ஆற்றி வாசகர்களின் மனங்களில் நிறைந்துள்ளார்.

அக்காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் – இந்திய அரசு யுத்தம், தமிழீழ விடுதலைப்புலிகள் – இலங்கை அரசு யுத்தம், சுனாமிப் பேரலை அனர்த்தம் ஆகியன இடம்பெற்று மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த காலம். தனது பிராந்தியத்தில் அக்காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தையும் உடனுக்குடன் தான் பணியாற்றிய ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர அவர் தவறியதில்லை.

அவர் வெளிக்கொண்டு வந்த பல செய்திகள் சர்வதேசம் வரை பரவின. அதுமட்டுமல்ல மக்கள் எதிர்நோக்கிய அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகளையும் வெளிக்கொணர்ந்து அவற்றுக்கு மக்கள் தீர்வைப் பெறுவதற்கும் உதவியுள்ளார்.

தில்லைநாதன், கண்டியிலிருந்து அக்காலத்தில் வெளிவந்த ‘செய்தி’ வார இதழில் 1968 ஆம் ஆண்டு தனது ஊடகப் பணியை ஆரம்பித்தார். அதே ஆண்டே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ‘ஈழநாடு’ பத்திரிகையில் செய்தியாளரானார். பின்னர் ‘வீரகேசரி’ பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராக அரை நூற்றாண்டாகத் தனது ஊடகப் பணியைத் தொடருகின்றார்.





அதேவேளை, ‘தினபதி’, ‘சிந்தாமணி’, ‘தினகரன்’, ‘உதயன்’, ‘சுடர் ஒளி’, ‘காலைக்கதிர்’ ஆகிய பத்திரிகைகளிலும் பிராந்திய செய்தியாளராகத் தில்லைநாதனின் ஊடகப் பணி தொடர்ந்தது.

பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகளில் தில்லைநாதன் பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றியுள்ளார் – பணியாற்றுகின்றார். அவரின் உன்னத ஊடகப் பணிக்கு இது சிறந்த சான்றாகும்.

மாணவனாக இருந்தபோது வாசிப்பின் மீது இருந்த ஆர்வமே ஊடகத் துறைக்கு அவரை இழுத்துச் சென்றது. தான் மட்டுமல்ல இளம் வயதினரையும் இத்துறையில் ஆர்வம் காட்டச் செய்து, அவர்களைப் பத்திரிகைகளில் செய்தியாளர்களாக இணைவதற்கும் வழிகாட்டியவர். அவர்கள் சிறந்த ஊடகவியலாளர்களாகத் திகழ்ந்து பல பத்திரிகைகளில் பணியாற்றினார்கள் – பணியாற்றுகின்றார்கள்.

1970 – 1977 காலப் பகுதியில் வடமராட்சியில் பல கிராமங்கள் கைவிடப்பட்டு அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. கல்வி, வீதி, போக்குவரத்து, சுகாதாரப் பிரச்சினைகள் நிறைந்த பகுதியாகவே வடமராட்சி கிழக்குப் பிரதேசம் காணப்பட்டது. அப்பிரதேசத்தில் 14 பாடசாலைகள் தரம் 5 அல்லது தரம் 6 வரை உள்ள பாடசாலைகளாகவே காணப்பட்டன. மூன்று பாடசாலைகள் மட்டுமே ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் உள்ளதாக இருந்தன. இதனால் அப்பிரதேசத்தில் ஏராளமான மாணவர்கள் தமது ஆரம்ப வகுப்புகளுடன் தமது கல்வியை நிறுத்தி இடைவிலகிச் செல்கின்ற நிலை காணப்பட்டது.

இந்த அவலநிலை பற்றிய செய்திகளை எல்லாம் அப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பத்திரிகைகளில் வெளியிட்டு அப்பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வு பெற உதவினார். அரச பஸ் சேவை மட்டும் அப்பிரதேசத்தில் இடம்பெற்றது. அச்சேவையில் நடைபெறும் தவறுகளையும் அவர் பத்திரிகைகள் மூலம் வெளிக்கொணரத் தவறியதில்லை.

முன்னாள் பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.துரை ரத்தினம் அப்பிரதேசத்துக்குச் செல்கின்றபோது அவருடன் தானும் சென்று அப்பிரதேச நிலைமைகளைக் கண்ணுற்று அதனைப் பத்திரிகைகள் மூலம் வெளிக்கொணரத் தவறியதில்லை.

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் போர் மூண்டபோது வடமராட்சியில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களைத் தான் சார்ந்திருந்த பத்திரிகைகள் மூலம் வெளியே கொண்டு வந்தார். அக்காலத்தில் இடம்பெற்ற வல்வைப் படுகொலை மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் போன்ற சம்பவங்களைச் செய்தியாக வாசகர்களுக்கு அறியத்தந்தார்.


இலங்கை இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ‘ஒப்பரேசன் லிபரேசன்’ தாக்குதலின்போது மக்களின் இடம்பெயர்வு அவலங்கள் சம்பந்தமான செய்திகளையும் பத்திரிகைகள் மூலம் வெளிக்கொணரச் செய்தார்.

அதன்பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே இடம்பெற்ற மோதலின்போதும் வடமராட்சியில் இடம்பெற்ற சம்பவங்களையும் செய்தியாக வெளிக்கொணர அவர் தவறவில்லை.

1991 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆனையிறவுப் படைமுகம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாய கடல்வெளித் தாக்குதல், வெற்றிலைக்கேணியில் இராணுவம் தரையிறக்கம் தொடர்பான செய்திகளை மோதல் நடைபெற்ற காலப் பகுதியில் தினமும்

(18ஆம் பக்கம் பார்க்க)

# 30 அடியைத் தொட்ட இரணைமடுக் குளம்



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரும் குளமான இரணைமடுக் குளத்தின் நீர் நேற்று 30 அடி 4 அங்குலத்தைத் தொட்டுள்ளது.

இந்தக் குளம் 36 அடியை அதன் மொத்த கொள்ளளவாகக் கொண்டுள்ளது.

குளத்தின் 100 வீதமான 36 அடி நீர் காணப்படுமாக இருந்தால் 2024 ஆம் ஆண்டும் சிறுபோக நெற்செய்கையில் சுமார் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ஏக்கர் வரையான நெற் செய்கையை மேற்கொள்ள முடியும். இருந்தபோதும் இந்தக் குளமானது 100 வீத கொள்ளவைக் காண இன்னும் அதிக நீர் வரத்து தேவையாகவுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 500 கிலோ கஞ்சா தமிழகத்தில் மீட்பு



(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 500 கிலோகிராம் கஞ்சா தமிழகப் பொலிஸாரால் நேற்று கைப்பற்றப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட் டம், சூரங்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடல் பகுதி ஊடாக இலங்கைக்குக் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ ார் மேற்கொண்ட சோதனையின் போது, ஒரு வாகனத்தில் கடற்கரையை நோக்கி எடுத்து வந்த 500 கிலோகிராம் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர்.

இதன்போது கஞ்சாவைக் கடற் கரைக்கு எடுத்து வந்த இரண்டு சந் தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

## வாழ்நாள் சாதனையாளர் 'வடமராட்சி தில்லைநாதன்'

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)


பத்திரிகைகளில் செய்தியாக வெளிவர உழைத்தார்.

2004ஆம் ஆண்டு இலங்கையில் சுனாமிப் பேரவலம் ஏற்பட்டபோது வடமராட்சியில் தொண்டமானாறு தொடக்கம் கட்டைக்காடு வரையான கரையோரக் கிராமங்கள் கடல் அலை யால் அடித்துச் செல்லப்பட்டதையும், ஆயிரக்கணக்கான மக்கள் கடல் அலை யால் காவுகொள்ளப்பட்டதையும், காயமடைந்த சம்பவங்களையும் இவர் செய்தியாக வெளிக்கொண்டு வந்தார்.

இவர் நீதிமன்றச் செய்திகளையும் பத்திரிகைகளில் தொடராக வாசகர் அறிய வெளிக்கொணர்ந்தார். வடக் கில் இடம்பெற்ற கொலை வழக்கு களை நீதிமன்றம் சென்று சேகரித்து வழங்கி வந்தார். பருத்தித்துறையில் மாணவி ஒருவர் கொடூரமாகப் படு கொலை செய்யப்பட்டு ஆனை விழுந்தான் சுடலைக்கு அண்மை யில் வீசப்பட்ட கமலம் கொலை வழக்கு, செம்மணி கிருஷாந்தி கொலை வழக்கு, பருத்தித்துறை திக்கமுனை மைதா னத்தில் இடம்பெற்ற 'காணிவேல்' நிகழ்வின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட தாக்குதல் பற்றிய வழக்கு ஆகியவற் றைப் பத்திரிகைகளில் தொடராக வர உழைத்தார். அத்துடன் வடமராட்சி கிழக்கு – மணற்காட்டில் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்ட செய்தியையும் முதன்முதலாகப் பத்திரிகைகளில் வெளிக்கொணர்ந்தார்.

இவர் செய்தியாளராகக் கடமை யாற்றிய காலத்தில் பெரும் பகுதி மிக இக்கட்டான காலப் பகுதியாகும். ஊடகங்களும், ஊடகவியலாளர்க ளும் மிகப் பெரிய சவால்களை எதிர் நோக்கியிருந்த காலம். அக்காலப் பகுதியில் துணிவுடனும் பக்கச்சார் பின்றியும் செய்திகள் வெளிவர உழைத் தார். தொழில்நுட்ப வசதிகள் எதுவு மற்ற காலப் பகுதியில் செய்திகளைப் பத்திரிகை நிறுவனங்களுக்கு நேரில் கையளித்தும், தபால் மூலம் அனுப் பியும் பத்திரிகைகளில் அவை வெளி வர நடவடிக்கை எடுத்தார்.

ஊடகத்துறையில் 50 ஆண்டுக ளுக்கு மேலாகத் தனது பணியைத் தொடரும் தில்லைநாதனுக்கு அவரது 73 ஆவது அகவையில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்குவது பொருத்தமானதாக அமைந்துள்ள துடன் அவரது பணியும் பாராட்டுக் குரியது.



# யாழ். நகர் பகுதியில் அதிகரித்த வழிப்பறி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியை அண்டிய பகுதிகளில் இரவு வேளைகளில் வழிப்பறிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். நகர் பகுதியை அண்டிய முட்டாஸ்கடை சந்திப் பகுதிகளில் இரவு வேளைகளில் வீதியில் பயணிப்பவர்களை வழிமறிக்கும் போதை ஆசாமிகள், அவர்களை மிரட்டி, பணப்பையில் (பேர்ஸில்) இருக்கும் பணத்தை வழிப்பறி செய்து வருகின்றனர்.

காங்கேசன்துறை வீதி – ஸ்ரான்லி வீதி ஆகிய இரு பிரதான வீதிகளும் சந்திக்கும் சந்தி பகுதியான குறித்த சந்தியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் , இருளில் மறைந்து இருக்கும் போதை ஆசாமிகள், வீதியில் தனியாக மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் பயணிக்கும் நபர்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேர்ஸில் இருக்கும் சிறு தொகைப் பணத்தை மட்டுமே கொள்ளையடித்து வருவதால் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப் பின்னடிக்கின்றனர். இதனால் போதை ஆசாமிகளின் வழிப்பறி கொள்ளை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

அதனால் சந்தி பகுதியில் மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு யாழ். மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், யாழ்ப்பாணம் பொலிஸார் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர்.



# ஐஸ், ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளைத் தம் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவில் மஹியங்கனைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளைத் தம் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 32 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரிடம் இருந்து 6050 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 1400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் மஹியங்கனை பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

# பாலஸ்தீனர்களை இஸ்ரேல் படைகள் நிர்வாணமாக கொண்டு சென்றனர்!





காசா பகுதியில் மோதலில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் படையினர் அப்பகுதியில் கைது செய்யப்பட்ட ஆண்களை நிர்வாணமாக்கி, கைகளை பின்பக்கம் கட்டி திறந்தவெளி ஒன்றுக்கு வாகனத்தில் அழைத்து செல்லும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகி கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஆனால், இதனை பெரிதாக அலட்டிக் கொள்ளாத இஸ்ரேல் தரப்பு ஒரு சர்வ சாதாரண சம்பவமாக தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் ஸ்கை நியூஸ் உடனான நேர்காணலில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆலோசகரான மார்க் ரெகெவ், பாலஸ்தீன மக்களின் ஆடைகளை களைவது மற்றும் அவர்களின் கண்களை கட்டுவது குறித்த கேள்விக்கு பதிலளித்தார்.

“முதலில், நாங்கள் இங்கே மத்திய கிழக்கில் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள், வானிலை மிகவும் சூடாக இருக்கிறது” என்று ரெகேவ் சர்வசாதாரணமாக பதிலளித்துள்ளார்.

இது ஜெனிவா ஒப்பந்தத்தை மீறுகிறதா என்று நெதன்யாகுவின் ஆலோசகரிடம் நிகழ்ச்சி தொகுப்பாளர் கேட்டார்.

“இவை இஸ்ரேல் அரசால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ காணொலிகள் அல்ல” என்று ரெகேவ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய இராணுவத்தின் உறுப்பினர்களால் காணொலி எடுக்கப்பட்டால், அது ஜெனிவா உடன்படிக்கையின் தெளிவான மீறலாக அமையும் என்று தொகுப்பாளர் வலியுறுத்தினார்.

“சர்வதேச சட்டத்துடன் எனக்கு அந்த அளவிற்கு பரிச்சயம் இல்லை,” என்று ரெகேவ் கூறினார், “நான் எனது சட்டத்துறையை சரிபார்க்க வேண்டும்.” என்றார்.

கடந்த வியாழன் அன்று, இஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் காசா பகுதியில் இருந்து டசின் கணக்கான பாலஸ்தீனியர்களின் படங்கள் மற்றும் காணொலி காட்சியை வெளியிட்டது, வடக்கு காசா பகுதியில் ஒரு நடவடிக்கையின் போது இஸ்ரேலிய இராணுவத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

பாலஸ்தீனியர்கள் தங்கள் உள்ளாடைகளுடன் தெருவில் அமர்ந்து, பல இஸ்ரேலிய வீரர்களால் சூழப்பட்ட நிலையில், தங்கள் கைகளால் தங்கள் மார்பை மறைக்க முயல்வதை காணொலி காட்சி காட்டுகிறது.

# உடனடியாக சரணடையுங்கள்: ஹமாஸுக்கு இஸ்ரேல் அழைப்பு

காச முனைகளில் அதிகரித்து வரும் பதற்றமான சூழ்நிலையானது இஸ்ரேல் – ஹமாஸ் ஆகிய இரு தரப்புக்களிலும் இருந்து பல்லாயிரம் உயிர்களை காவு கொண்டுள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கையானது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் இரண்டு மாதங்களை கடந்துள்ள நிலையில், ஹமாஸ் அமைப்பை உடனடியாக சரணடைய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அழைப்பு விடுத்துள்ளார்.

போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்றும் ஆனால் ஹமாஸ் அமைப்பின் அழிவு ஆரம்பித்துவிட்டது என்றும் பெஞ்சமின் நெதன்யாகு தனது அழைப்பில் தெரிவித்துள்ளார். மேலும், “இது பாலஸ்தீன அமைப்புகளின் முடிவு. எல்லாம் முடிந்துவிட்டது, உங்கள் தலைவர் சின்வாருக்காக நீங்கள் உயிரை விட வேண்டாம். சரணடைந்துவிடுங்கள்” என கூறியுள்ளார்.



சில ஹமாஸ் அமைப்பினர் சரணடைந்துள்ளனர் என நெதன்யாகு தெரிவித்துள்ள நிலையில், இஸ்ரேல் இராணுவம் அதற்கான எந்த சான்றையும் வெளியிடவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய ஹமாஸ் அமைப்பு யாரும் சரண்டையவில்லை எனத் தெரிவித்துள்ளது.

இதுவரை 17,700 இற்கும் மேற்பட்ட மக்களை இஸ்ரேல் இராணுவம் கொன்று குவித்துள்ளது என்றும் மருத்துவமனைகளில் தாக்குதல் நடத்தியுள்ளது என்றும் ஹமாஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில் ஐ.நாவின் போர் நிறுத்தத்திற்கான எந்த முயற்சியும் வெற்றியைத் தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.